மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை
முன்னிலை திரு.எஸ்.இளையராஜா, எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், செங்கோட்டை
2025 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10 ம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.5/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.70/2016**

CNR No.TNTS0E0035622016

....

1. செண்டு என்ற படைவீட்டாள்
2. மாரியப்பன் ...மனுதார்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

1. கணபதி
2. கௌதம் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது என் முன்பு விசாரணைக்கு வந்தபோது .மனுதார்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.ஜெகதீசன் அவர்களும் முன்னிலையாகியும், வரப்பெற்ற இம்மனுவில் இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்களையும் ஆராய்ந்து பார்த்து இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்....

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 16, விதி 1 மற்றும் 151 சி.பி.சி–யின் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ள சாட்சிகளை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகளாக நீதிமன்ற அனுமதியின்பேரில் அழைப்பாணை அனுப்பி விசாரணை செய்து மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பை தெளிவு செய்ய ஒரு சந்தர்ப்பம் வழங்கி உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.12.10 17:41:46 +0530

**2. மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்:**

அசல் வழக்கில் 1ம் வாதி, 2ம் பிரதிவாதியுடன் பிறந்த சகோதரர் ஆவார். 2ம் வாதி 1ம் வாதியின் மகன் என்றும், வாதி வழக்குரை தபசில் சொத்தை பொறுத்து 3வது இனத்தை 2ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யவும், 3ம் தபசில் சொத்திலிருந்து 2ம் மனுதாரரை வெளியேற்றி சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கக் கோரியும் மற்றும் 1, 3, 4 இன சொத்தில் 2ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யும்படிக்கும் மற்றும் செலவுத்தொகை கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வாதி வழக்குரையில் குறிப்பிட்டிருந்த உபயதரப்பினரை பொறுத்துள்ள உறவுமுறைகள் உண்மை எனவும், வாதி வழக்குரையில் 3, 4 தபசில் சொத்துக்களைப் பொறுத்து குறிப்பிட்டுள்ள எல்கைமால்கள் தவறானவை என்றும், வாதிகளின் வரைபடமும் ஒருதலைபட்சமாக வாதிகளுக்கு அனுசரணையாக அளவுகள் எதுவும் குறிப்பிடாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்குரை 4வது அட்டவணை சொத்தை பொறுத்து வாதிகள் குறிப்பிடும் விஸ்தீரண அளவுகள் வாதி உரிமை கோரும் மூல ஆதரவுக்கு வாதி உரிமை கோரும் மூல ஆதரவுக்கு முரண்பட்டவை எனவும், உபயவாதிகளின் தகப்பனாரான குத்தாலிங்க தேவருக்கு இரண்டு மனைவிகள் உண்டு. முதல் மனைவியின் பெயர் வெள்ளைத்தாய் அவர் மூலம் குத்தாலிங்க தேவருக்கு பேச்சிமுத்து தேவர் என்ற மகனும், சுப்பம்மாள் என்ற மகளும் வாரிசுகளாக இருந்து வந்ததாகவும், குத்தாலிங்க தேவரின் 2வது மனைவி பெயர் அருணாசலவடிவம்மாள் ஷையார் மூலம் 1ம் வாதி கணபதி மற்றும் வெள்ளப்பாண்டி, முருகையா ஆகிய 6 ஆண்மக்களும் 1ம் பிரதிவாதி மற்றும் கணபதி அம்மாள், லெட்சுமி ஆகிய 3 பெண் மக்களும் சட்டக்கால் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி விவரத்தை வாதிகள் தங்கள் வழக்குரையில் மறைத்துள்ளார்கள்.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.12.10 17:41:54 +0530

லேட்.குத்தாலிங்க தேவரின் பெண் வாரிசுகளில் 1ம் பிரதிவாதியை தவிர மற்ற பெண் வாரிசுகள் அனைவருக்கும் நல்ல முறையில் சீர்சீராட்டுகள் செய்து திருமணம் நடைபெற்றது. 1ம் பிரதிவாதிக்கு மட்டும் பின்னால் இடம் தருவதாக ஒப்புக்கொண்டு திருமணம் நடைபெற்றதாகவும், வழக்குரை தபசில் சொத்துக்கள் வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் ஆன குத்தாலிங்க தேவருக்கு வா.சா.ஆ.1ன் படி பாத்தியப்பட்டவையாகும். அதில் ஒரே தடியாக புல எண்.25/2க்குட்பட்ட 23 செண்ட் இடத்தையும், புல எண்.25/5க்குட்பட்ட 18 செண்ட் இடத்தையும் ஒரே தடியாக லேட்.குத்தாலிங்க தேவர் தான் உயிருடன் இருக்கும் காலத்திலேயே நல்ல மன நிலையிலும், உடல் நிலையிலும் பிறர் தூண்டுதல் அன்னியில் 25.09.1976ம் தேதி வா.சா.ஆ.1ன் அடிப்படையில் 1ம் வாதி பெயருக்கு ஒரு விருப்புறுதி ஆவணம் எழுதிக்கொடுத்திருந்ததாக குறிப்பிட்டுள்ள விவரங்கள் எதுவும் பிரதிவாதிகளுக்கு நேரில் தெரியாது எனவும், அவை உண்மையில்லை எனவும், குத்தாலிங்க தேவர் 1977ம் ஆண்டு ஷையாரின் 2ம் தார மனைவி அருணாசல வடிவம்மாள் 1997ம் வருடத்திலும் இறந்துபோய்விட்டார்கள் என்பது மட்டும் உண்மை. ஆனால் வாதி தன் வழக்குரையில் விருப்புறுதி ஆவணமே கடைசி ஆவணம் என்பதும், அதன்பின்னர் வழக்குரை தபசில் சொத்தை 1ம் வாதி அனைத்து முழு உரிமையாளர் நிலைமையில் அனுபவமும், ஆளுகையும் செய்து வந்தார் என்று சொல்லியிருப்பது உண்மையில்லை.

2ம் பிரதிவாதியின் தாத்தா இறந்த பின்பு 1978ம் வருடம் குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் 2ம் பிரதிவாதியின் தாயாருக்கு எதிர்வழக்குரையில் விவரித்துள்ள விஸ்தீரணம் கொண்ட காலிமனை 2ம் பிரதிவாதியின் தாயாரின் திருமணத்திற்கு சீராக கொடுப்பதாக ஒப்புக்கொண்ட வகைக்கு 3 செண்ட் இடம் மட்டும் வாய்மொழியாக பிரிவினை செய்யப்பட்டு புல எண்.25/5க்குட்பட்ட 18 செண்ட் இடம் 1வது வாதியை தவிர

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.12.10 17:42:01 +0530

லேட்.குத்தாலிங்க தேவரின் இதர ஆண் வாரிசுகளுக்கும் என வாய்மொழியாக பிரிவினை செய்யப்பட்டு அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் அவரவர்கள் வீடு கட்டி வில்லங்க பாராதீனம் செய்து அனுபவித்து வந்ததாகவும், 2ம் பிரதிவாதியின் தாயாரும், வாய்மொழி பாகப்பிரிவினையில் 2ம் பிரதிவாதியின் தாயார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட வழக்குரை 3ம் தபசில் சொத்தில் 1979 முதல் வீடு கட்டி மேற்படி வீட்டிற்கு கதவு எண்.1/22ஏ வரிவிதிப்பு 1230 என 1ம் பிரதிவாதி பெயருக்கு வரிவிதிப்பு ஏற்பட்டு என் தாயாரான 1ம் பிரதிவாதியே உரிமையாளர் நிலைமையில் வழக்குரை 3ம் தபசில் சொத்தை அடைந்து தொடர்ந்து அனுபவித்து வந்ததாகவும், என் தாயாரால் கட்டடப்பட்டுள்ள வீட்டிற்கு 136 என மின் இணைப்பு எண் குடும்ப தலைவர் என்ற முறையில் என் தகப்பனார் பெயரில் வழங்கப்பட்டு 1990 முதல் மின்கட்டணம் செலுத்தியும் வந்துள்ளதாகவும், மேற்படி விவரம் 1ம் வாதிக்கும் இந்த மனுவில் விவரிக்கப்பட்டுள்ள சாட்சிகளுக்கும் நேரில் தெரியும்.

மேலும் மனுதாரரின் தாயார் வழக்குரை தபசில் சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைத்துவிடுவதாக ஒருபோதும் 1ம் வாதியிடம் ஒப்புக்கொண்டிருப்பதில்லை. மனுதாரரின் தாயார் அவருக்கு உரிமைப்பட்டுள்ள வழக்குரை 3ம் தபசில் சொத்தை 26.11.2014ம் தேதிய ஏற்பாடு ஆவணத்தின்படி மனுதாரர் பெயருக்கு பாத்தியப்படுத்திக்கொடுத்து மனுதாரர் அதை ஏற்றுக்கொண்டு அனுபவித்து வந்து வழக்குரை தபசில் சொத்தின் வரிவிதிப்பும் மனுதாரர் பெயரில் ஏற்பட்டுள்ளதாகவும், மனுதாரரும், அவரது தாயாரும் வழக்குரை 3ம் தபசில் சொத்தை சுமார் 30 வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்து அனுபவித்து வந்த விவரம் மனுவில் கண்டுள்ள சாட்சிகளை மனுதாரர்கள் தரப்பு சாட்சிகளாக நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் அனுமதி பெற்று விசாரித்து தெளிவு செய்ய வேண்டியது அவசியமானதாகும். எனவே மனுவில் குறிப்பிட்டுள்ள சாட்சிகளை மனுதாரர்கள் தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பி

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.12.10 17:42:08 +0530

விசாரணை செய்ய அனுமதியளிக்க உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்.</u>**

மனுதாரரின் மனு சட்டப்படியும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதில்லை. மனுதாரர்கள் தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள பி.வா.சா.1 யை எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்த பின்னர் அதில் ஏற்பட்டுள்ள குறைபாட்டை நிவர்த்தி செய்யவும், கூடுதல் சான்றாவணங்கள் மற்றும் சாட்சி பட்டியல் ஆகியவைகள் குறித்து முன்னரே தாக்கல் செய்யாமல் எதிர்மனுதாரர்கள் விசாரணையானது முழுவதும் முடிக்கப்பட்ட பின்னர் அவர்களது வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் முற்றிலும் விரோதமானதாக யாதொரு ஆவணங்களையும் தாக்கல் செய்யாமல் மனுதாரர்கள் கூறியுள்ள சாட்சியை தேவையற்று விசாரிக்க முடியாது. அவைகளைக் கொண்டு மனுதாரர்களின் கட்சியில் உள்ள குறைபாட்டை நிவர்த்தி செய்ய முடியாது.

மனுதாரர்கள் அவர்களது எதிருரையில் கூறாத கூற்றுக்களை சாட்சியங்களின் மூலமாக விட்டுப்போனவைகளை நிரப்புகின்ற விதத்தில் (To fill–up the lacuna) இந்த மனுவில் அனுமதி கோரியிருப்பதால் மனுதாரர்களின் கோரிக்கைகளானது சட்டப்படிக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. மனுதாரர்கள் உறுதிக்கூற்றில் கூறியுள்ள கூற்றுக்கள் குறித்து அவரது எதிருரையில் யாதொரு கூற்றுக்களையும் முன்வைக்கவில்லை. மேற்படி வழக்கில் மனுதாரர்கள் அவரது கூற்றுக்களை முன் வைக்காமல் புதியதாக ஆவணங்களை தாக்கல் செய்யவும், புதிய சாட்சிகளை முன் வைக்கவும் அதனடிப்படையில் சாட்சியங்களை விசாரணை செய்யவும் சட்டப்படிக்கு இயலாது. எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யக்கோரி குறிப்பிடப்பட்டுள்ளது.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.12.10 17:42:14 +0530

4. <u>பிரச்சனை:–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை ஆகும்.

<u>பிரச்சனைக்குரிய தீர்வு –</u>

5. **இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.**

6. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரை 3ம் தபசில் சொத்தினை மனுதாரர் 26.11.2014 தேதியிட்ட ஏற்பாட்டு ஆவணத்தின்படி அனுபவித்து வருவதாகவும், ஷை 3ம் தபசில் சொத்தினை மனுதாரர் தொடர்ந்து 30 வருடங்களுக்கு மேலாக அனுபவம் செய்து வரும் விவரமானது இந்த மனு மூலம் விசாரிக்க கோரியுள்ள சாட்சிகளுக்கு தெரியும் என்பதால், அவர்களை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதேவேளையில், எதிர்மனுதாரர்/1ம் வாதி தரப்பில் அசல் வழக்கில் பி.வா.சா.1 இந்த எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்த பின்பு அதிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்காக இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முன்பு சாட்சி பட்டியல்கள் தாக்கல் செய்யாமல் தற்போது வழக்கு மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாதகமாக இருப்பதால், இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். அதனால் To fill–up the lacuna ஆக இந்த மனு தாக்கல் செய்துள்ளதால், தள்ளுபடி செய்யும்படி ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.12.10 17:42:21 +0530

மேற்படி இருதரப்பிலும் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை கவனமாக பரிசீலனை செய்கையில், அசல் வழக்கானது விசாரணைக்கு வரப்பட்டு எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ள நிலையில், இந்த மனுவை கூடுதலாக சாட்சிகளை விசாரிப்பதற்காக நீதிமன்ற அனுமதி கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே அசல் வழக்கானது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சிய விசாரணைக்காக நிலுவையில் இருப்பதால், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எந்தவித பாதகமும் ஏற்படப்போவதில்லை. மேலும் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு மேற்படி சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்வதற்கு போதிய வாய்ப்புள்ளது. அதனால் நீதியின் நலனைக் கருத்தில்கொண்டு இந்நீதிமன்றம் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,**

**இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2025 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.12.10 17:42:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், செங்கோட்டை

TNTS0E0035622016



**இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் –** இல்லை.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.12.10 17:42:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், செங்கோட்டை

மா.உ.நீ.ந. செங்கோட்டை
இ.ம.எண்.5/2025
(இன்)
அ.வ.எண்.70/2016
**உத்தரவு**
நாள் – 10.12.2025